# 'சாதிக்கும் மாணவர்களால் ஆசிரியர் முழுமை அடைகிறார்'



"சமூகத்தில் சாதிக்கும் மாணவர்களால், ஒரு ஆசிரியர் முழுமையடைகிறார்," என, பள்ளி கல்வி துறை அமைச்சர் மகேஷ் பேசினார்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில், 393 ஆசிரியர்களுக்கு, டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடந்தது.

## நம்பிக்கை

விருதுகளை வழங்கி, அமைச்சர் மகேஷ் பேசியதாவது: நல்லாசிரியர் விருது என்பதை, 'டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது' என மாற்றியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. காரணம், ஆசிரியர்கள் என்றாலே நல்லாசிரியர் என்பது, அவரின் நம்பிக்கை. சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை, வெறும் சம்பிரதாய நாளாக நடத்தாமல், கல்வித் துறைக்கான நாளாக மாற்றி, பல்வேறு திட்டங்களை துவக்கி உள்ளார், முதல்வர் ஸ்டாலின்.

'ஆசிரியர் ஏங்கினால், கல்வித் துறை தேங்கும்' என, அண்ணாதுரை கூறுவார்.நாங்கள் படித்தபோது, 'குறும்பு செய்தால், கண்களை மட்டும் வைத்து விட்டு தோலை உரித்து விடுங்கள்' என, ஆசிரியர்களிடம் பெற்றோர் கூறுவர். இப்போது நிலைமை அப்படியல்ல. சமூக வலைதளங்களில், எதைச் சொன்னாலும், அதை திரித்து வெளியிட்டு விடுகின்றனர். ஆதாரத்துடன் சொல்வது அவர்களின் வேலையல்ல. இப்படிப்பட்ட காலத்தில், ஆசிரியர் பணி என்பதே சவாலானது தான்.

## பாடுபடுங்கள்

சவால் நிறைந்த ஆசிரியர்களின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். அதை நினைவில் வைத்து, கடுமையாக உழைத்து, நல்ல சாதனையாளர்களை உருவாக்கப் பாடுபடுங்கள். ஒரு மாணவர், சமூகத்தில் நல்ல சாதனையாளராக மாறும்போது தான், ஆசிரியர் பணி நிறைவு பெறும். இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சர்கள் சுப்பிரமணியன், சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை கமிஷனர் நந்தகுமார், செயலர் காகர்லா உஷா, மாநில கல்வியியல் பயிற்சி மைய இயக்குனர் லதா உள்ளிட்டோர் பேசினர்.